**தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை மாவட்டச் செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மாத்தறை மாவட்ட செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 2 சொத்து அலகுகளின் மீதிகள் திறைசேரி அட்டவணை 82 இல் ஆரம்ப மீதியுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 241,616,032 வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த மீதிகள் தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | திறைசேரி அட்டவணை 82 இன் படி ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 16,053,453 தொகை மற்றும் ஆண்டின் போது அப்புறப்படுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 73,629,876 தொகைக்கான நிதியல்லாத சொத்துக்கள் ஒன்றிணைந்த சிகாஸ் அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் அனைத்து தனதாக்கல் மற்றும் அப்புறப்படுத்தல் தொடர்பாக உரிய முறையில் சிகாஸ் அறிக்கையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கொம்டோலர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கை மாவட்ட செயலகத்தினால் ரூபா 4,383,929 தொகைக்கான நீர் பவுசரின் பெறுமதியினை ரூபா 1,500,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 2,883,229 தொகை குறைவாக காட்டப்படல், வாகனம் ஒன்றின் பெறுமதியாகிய ரூபா 6,600,000 | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையினை பெற்று உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | சரியாக நிதியல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையில் தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையினை காட்டப்படாமை மற்றும் பஸ்கொட மற்றும் மாத்தறை ஆகிய 2 பிரதேச செயலகங்களின் காணிகளின் எண்ணிக்கை மற்றும் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து இருக்காமையால் நிதியல்லாத சொத்துக்களின் அசைவுக் கூற்றில் தகவல்கள் சரியானவை அல்ல என அவதானிக்கப்பட்டது. | | |

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணியிருக்காமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் பேணிச் செல்ல வேண்டியிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலம் தொடர்பான காத்திருக்கும் பதிவேடு மற்றும் வாகன சம்பவக் குறிப்பேடுகளை முறையாக மற்றும் நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்தப் பதிவேடுகளை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்தப் பதிவேடுகளை நாளதுவரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | 2017 ஏப்ரல் 22 திகதிய 255/2017 இலக்கங் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 03 இன் படி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தீர்க்கும் செய்முறை அடங்கக் கூடியவாறு CIGAS கணக்கீட்டு முறைமை நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளமையால் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 561,152 தொகைக்கான பொறுப்புக்கள் தொடர்பாக திறைசேரியினால் | CIGAS மென்பொருள் முறைமையில் காணப்படும் தொழிநுட்ப வழுக்கள் காரணமாக இந்த சிக்கல் ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டிருந்த CIGAS கணனி அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மேற் கூறிய சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் படி ஏதேனும் குறிப்பிட்ட தினத்தில் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்குமான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் எண்ணிக்கையை இனங்காணக் கூடியவாறு அரச கணக்குத் திணைக்களத்தினால் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தகவல் முறைமை ஒன்று பேணிச் செல்லப்படுகின்றமையால் அந்த தகவல் முறைமையை நாளாந்தம் நாளதுவரையாக்குவதற்காக அனைத்து செலவு அலகுகளினாலும் நாளாந்தம் தமது ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் அரச கணக்குத் திணைக்களத்தின் பேணப்படுகின்ற இணையத்தளத்தில் பதிவேற்றம் (Upload) உட்படுத்தப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் அவ்வாறு செய்யப்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | CIGAS மென்பொருள் முறைமையில் காணப்படும் தொழிநுட்ப வழுக்கள் காரணமாக இந்த சிக்கல் ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) | 2017 திசெம்பர் 22 திகதிய 263/2017 இலக்கங் கொண்ட அரச கணக்குச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் படி வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகள் காலாண்டு அடிப்படையில் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் தொடர்பாக 2018 ஆண்டு முதல் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் செலவுகள் காலாண்டு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு இயலுமான வகையில் CIGAS நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி தயாரிக்கப்பட்ட காலாண்டிற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | CIGAS மென்பொருள் முறைமை நேரடியாக இணைய தளமூடாக செயற்படாமையால் திட்டமிடப்பட்டவாறு அவ் விடயங்கள் நடைபெறவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பாதுகாப்பற்ற முறையில் மற்றும் பயன்படுத்தப்படாமல் மாவட்ட செயலக வளவில் நிறுத்தப்பட்டிருந்த டிரக்டர் வண்டி தொடர்பான தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இது மாத்தறை மாவட்ட செயலாளர் பேரில் உரித்தாக்குவதற்காக தேவையான தகவல்கள் கண்டறியப்படுகின்றது எனவும் உரித்தாக்கல் அலுவல்கள் பூர்த்தியடைந்த பின்னர் வாகனப் பதிவேட்டில் உட்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டு அதற்காக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் தகவல்கள் உரிய முறையில் நிறுவனத்தினுள் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஈ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளளது.

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | | |
| | ரூபா. | | | |
| (i) துப்பாக்கி கட்டளைச் சட்டம் | | | | |
| பிரிவு இலக்கம் 22(2)(எ) | -- | சுடுபடைக் கலன்களுக்கான அனுமதிப் பத்திரம் ஒன்று செல்லுபடியான தன்மை முடிவடைந்து உடைமையில் வைத்துக் கொள்ள கூடிய காலவரையறை 10 தினங்களாக காணப்பட்டதுடன் அனுமதிப் பத்திரமின்றி 10 நாட்களுக்கு மிகையான காலம் அந்த சுடுபடைக் கலன்களை உடைமையில் வைத்திருத்தல் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தண்டனை பெறக் கூடிய குற்றம் ஒன்றாக காணப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2022 பெப்ரவரி 10 திகதி வரை மாத்தறை மாவட்டத்தில் 14 சுடுபடைக் கலன்களின் உரிமையாளர்களிடம் காணப்பட்ட சுடுபடைக் கலன்களுக்காக 01 ஆண்டு முதல் 05 வரையான காலவீச்சில் அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்திருக்காததுடன் அந்த அனுமதிப் பத்திரம் | இது தொடர்பாக பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரை எழுத்துமூலம் அறிவுறுத்தப்பட்டது எனவும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரினாலும் பொலில் தலைமையகத்திற்கு அறிவுறுத்தி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறு அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காத சுடுபடைக் கலன்கள் தொடர்பாக அதிகாரிகளை அறிவுறுத்தி விரைவாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்றிய சுடுபடைக் கலன்களை திருப்பி ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. | | |
| (ii) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை<br>----------------------------------- | | | | |
| அத்தியாயம் xxiv பந்தி 4.4 மற்றும் பந்தி 4.5 | 87,852 | தெவிநுவர பிரதேச செயலகத்தை சேர்ந்த வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்தும், கொடபொல பிரதேச செயலகத்தின் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்திருக்காததுடன் அந்தக் கடன் மீதிகள் 05 வருடங்களுக்கு மிகையான காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது. இது தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டமா அதிபர் ஆலோசனையின் படி இந்த கடன் மீதிகளை பதிவழிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அதன் படி அங்கீகாரத்திற்காக அமைச்சுக்கு அனுப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் உரிய பிரிவுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------ | | | | |
| • நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138 மற்றும் 215(i) | 668,424 | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை காட்டி கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு 14 பிரதேச செயலகங்களினால் கொடுப்பனவு மேற்கொண்டிருந்த காரணத்தினால் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி உரிய முறையில் சித்தரித்துக் காட்டப்படவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் இவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்காக அறிவுரைகள் வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | • நிதிப் பிரமாணம் 1645(அ) | - | வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் தனது பொறுப்பில் காணப்படும் ஒவ்வொரு வாகனங்களுக்குமாக தமது அலுவலகத்தில் பொது 267 படிவத்தில் உள்ளவாறு வாகன சம்பவக் குறிப்பேடு ஒன்று பேணப்பட்டு, அதனை நாளதுவரை பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 7 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பதிவுசெய்யப்பட்டிருக்காத விடயங்களை பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iv) | பொது நிருவாக சுற்றறிக்கைகள்<br>---------------------------------------- | | | | |
| | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | -- | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாதகாலத்திற்கு பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடிய பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான திருத்த வேலை ஒன்றின் பின்னர் ஆகிய விடயங்களில் ஆரம்பத்தில் ஏற்படும் சந்தர்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 16 வாகனங்களில் 15 இனதும் அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிலவிய கொவிட் 19 நிலைமையின் காரணமாக 2021 ஆண்டின் போது அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள முடியாமல் போனது எனவும் தற்போது காணப்படும் எரிபொருள் சிக்கல் நிலைமையின் கீழ் இவ்வாறு மேற்கொள்ள முடியாதுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (v) | ஏனைய சுற்றறிக்கைகள்<br>---------------------------------- | | | | |
| | • 2008 ஒக்தோபர் 03 திகதிய 9/2008 இலக்கங் கொண்ட ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை, 2010 மார்ச் 31 திகதிய 9/2008 (திருத்திய) சுற்றறிக்கை, 2018 | 2,748,197 | இராணுவச் சேவை மற்றும் நலிவுற்றோர் ஓய்வூதியம் (59,6) ஒருங்கிணைத்து செலுத்தாமையால் தெரிவுப் பரிசோதனையின் படி மாத்தறை மாவட்டத்தில் 03 பிரதேச செயலகங்களில் 19 ஓய்வூதியம் பெறுவோருக்கு 2014 ஜுன் முதல் 2021 திசெம்பர் வரை காலப் பகுதி தொடர்பாக | மிகையாக செலுத்தப்பட்டிருந்த கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியத்தை கணித்து ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கும் படி பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க மிகையாக செலுத்திய தொகையை அறவீடு செய்வதற்கும் இந்தக் குறைபாட்டை சரி செய்து கொள்வதற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜூலை 17 திகதிய 9/2008 இலக்கங் கொண்ட (திருத்திய II) சுற்றறிக்கை மற்றும் 2019 மே 09 திகதிய ஓய்வூதிய அறிவுரைக் கடித இலக்கம் 6/2019 | | மிகையாக செலுத்தப்பட்டடிருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 2011 மே 16 திகதிய 04/2011 இலக்கம் கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கையின் பந்தி 03 மற்றும் 2014 நவம்பர் 03 திகதிய 13/2014 இலக்கம் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பந்தி 03 | 342,000 | பல ஓய்வூதியங்களை ஒன்றினைத்து பெற்றுக்கொள்ளும் போது ஒன்றித்த ஓய்வூதியத்துக்கு மாத்திரம் இடை நேர் கொடுப்பனவு வழங்க வேண்டியிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் படி 02 பிரதேசங்களில் ஓய்வூதியம் பெறும் இருவருக்கு வாழ்க்கைப் படி (4) மற்றும் இராணுவ சேவை விதவைகள் ஓய்வூதியம் (40) இன் கீழ் இடைக்காலக் கொடுப்பனவு என மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கும் படி அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டதென அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க மிகையாக செலுத்தப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கும் இந்த குறைபாட்டை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 2020 ஆகஸ்ட் 26 திகதிய 06/2020 இலக்கம் கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பந்தி 10.1 | - | குறிப்பிட்ட கால வரையறையுள் சுடுபடைக் கலன்கள் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தலை புறக்கணிக்கும் சுடுபடைக் கலன்கள் அனுமதிப்பத்திரதாரர்கள் தொடர்பான தகவல்கள் சுடுபடைக் கலன் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்பு அமைச்சுக் செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 பெப்ரவரி 10 திகதி வரை குறிப்பிட்ட தகவல்கள் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதனால் துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தின் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்க | இது தொடர்பாக பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரை அறிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. | இவ்வாறு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காத சுடுபடைக் கலன்கள் தொடர்பாக அதிகாரிகளை அறிவுறுத்தி விரைவாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முடியமல் இருந்தது. | | |
| • 2018 செப்தம்பர் 26 திகதிய MOD/CFS/12/FA/14 கொண்ட பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரின் கடிதத்தின் பந்தி 03 | - | மாவட்ட செயலகத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும் சிதைவடைந்த அல்லது பயன்படுத்தப் பொறுத்தமில்லாத சுடுபடைக் கலன்களை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைத்து அதன் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் வெளிக்கள படையணி தலைமையகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 10 சுடுபடைக் கலன்கள் அழிக்கப்பட வேண்டும் என மதிப்பீட்டுக் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2022 பெப்ரவரி 11 திகதி வரை இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது களஞ்சியத்தில் காணப்படும் சுடுபடைக் கலன்கள் பொலிஸ் வெளிக்கள படையணி தலைமையகத்திற்கு ஒப்படைப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட்டு இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

**(உ) முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) மாத்தறை பிரதேச செயலகத்தில் ரூபா 3,835,015 இற்கான செலவொன்று மேற்கொண்டு நிறுவப்பட்டிருந்த மின்தூக்கி 2022 ஆகஸ்ட் மாதம் அளவில் செயற்படாத நிலைமையில் காணப்பட்டதுடன், இந்த செயற்திட்டத்திற்குரிய தடுத்து வைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. தற்போது சேவை முகவராண்மை நிலையம் தமது பொறுப்பை புறக்கணிக்கும் நிலைமையின் கீழ் இதுவரை இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,608,657 இற்கான செலவு விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | தற்போது திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த மின்தூக்கியை உரிய நிலைமைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) மாத்தறை பிரதேச செயலகத்தை சேர்ந்த மாத்தறை கோட்டை மஹிந்த விஜேசேகர விலையாட்டு மைதானத்தின் 2021 திசெம்பர் வரையான மின்சார பில்பத்திரத்தின் ரூபா 92,112 இற்கான மற்றும் நீர் பில்கட்டணம் ரூபா 24,823 இற்கான நிலுவையொன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. மின்சார பில்பத்திரத்தில் மற்றும் நீர் பில்பத்திரத்தில் இந்த அளவு நிலுவையொன்று காணப்படுவதற்கான காரணத்தை பரிசோதனை செய்து அதனை தீர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத காலப் பகுதியில் நீர் பில்பத்திரம் இந்த அளவு அதிகரிப்பதற்கான காரணத்தை விளக்கம் ஒன்று தரும்படி நீர் வழங்கல் சபையிடம் வினவியுள்ளதெனவும், மாவட்ட செயலகத்தினால் இந்த விளையாட்டுத் திடலை ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலும் நிலுவை மின் கட்டணம் ஒன்று காணப்பட்டதென அறிவிக்கப்பட்டது. | நிலுவை நீர்க் கட்டணம் மற்றும் நிலுவை மின்சாரக் கட்டணம் ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ரூபா 8,138,542,000 இற்கான ஏற்பாடொன்று விண்ணப்பித்திருந்ததுடன் ரூபா 5,589,488,000 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்தது. விண்ணப்பித்திருந்த ஏற்பாடுகளை விட ரூபா 2,549,054,000 தொகை குறைவாக கட்டுநிதி கிடைத்திருந்தது. அது ரூபா 54,596,000 இற்கான மற்றும் ரூபா 464,605,000 இற்கான வீச்சில் அதாவது 13 சதவீதம் மற்றும் 49 சதவீத வீச்சில் காணப்பட்டது, | இது நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பானது எனவும், ஏற்பாடுகள் விண்ணப்பித்த போதும் திறைச்சேரியினால் கட்டுநிதி வழங்கும் போது இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதிகள் விண்ணப்பிக்கும் போது தேவைப்பாடுகளை நன்றாக இனங்கண்டு கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 04 மூலதனச் செலவு விடயங்கள் தொடர்பாக மொத்த தேறிய ஏற்பாடுகளில் 16 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சில் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | அலுவலக உத்தியோகத்தர்கள் ஆனேகமானோர் வீட்டிலிருந்தே கடமைகள் மேற்கொள்ளல் அனேகமாக இணையத்தினூடாக கூட்டங்கள் நடாத்துதல் | தேவைப்பாடுகளின் படி ஏற்பாடுகளுக்கு விண்ணப்பிப்பதற்கும் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் ஆகிய காரணங்களினால் இவ்வாறு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 08 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கான மதிப்பீட்டு ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் ஏனைய 19 மீண்டுவரும் செலவு விடயங்களிலிருந்து 03 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகளை மாற்றி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் விண்ணப்பித்த தொகையை குறைத்து திருத்திய மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | செலவு விடயங்களுக்காக ஏற்பாடுகள் விண்ணப்பிக்கும் போது முடிந்தளவு போதிளவு ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 19 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக மதிப்பீட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தாமையால் அந்த ஏற்பாடுகளில் 0.06 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகள் ஏனைய மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செலவை முகாமைத்துவம் செய்தமையால் சேமிப்பு ஏற்பட்டதெனவும், மீதித் தொகை அத்தியவசியமான செலவுகளுக்காக மாற்றப்பட்டதெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (ஈ) | கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை செலவு விடயத்தின் கீழ் பிடபெத்தர பிரதேச செயலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 23.68 மில்லியன் தொகைக்கான ஏற்பாடொன்று கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி அளவில் அவற்றில் ரூபா 0.056 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தமையால் ரூபா 23.624 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு செயற்திட்டத்திற்கு கிடைத்திருந்த ஏற்பாடுகளில் 99.7 சதவீதத்தை கொண்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி பௌதீக முன்னேற்றம் 14 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கையொப்பமிட்ட ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையை மீறி வேலையை இடைநடுவில் நிறுத்தியிருந்தமையால் இந்த நிலைமை ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டினுள் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாலிம்பட பிரதேச செயலக கட்டிட நிர்மாண வேலைக்காக கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை செலவு விடயத்தின் மூலம் ரூபா 29 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அவற்றில் ரூபா 0.793 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 28.21 மில்லியனிற்கான சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ஏற்பாடுகளில் 97 சதவீதமாக காணப்பட்டது. | கொரோனா நிலைமையின் காரணமாக பெறுகை அலுவல்கள் தாமதம் அடைதல், விலைகள் அதிகரித்த காரணத்தினால் மதிப்பீடுகளை திருத்த நேரிட்டமை, ஒப்பந்தக் காரர்கள் விலைகூறல்களை சமர்ப்பிப்பதற்கு பின்னடைந்த காரணத்தினால் நிர்மாண வேலையை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலை செலவு விடயத்தின் கீழ் திக்வெல்ல பிரதேச செயலகக் கட்டிடம் நிர்மாணித்தல் பழைய மற்றும் புதிய கட்டிடத்தை தொடர்புபடுத்துவதற்காக கூட்டுத்தொகை ரூபா 13 மில்லியன் ஏற்பாடுகள் மற்றும் திககொட மாலிம்பட மற்றும் திக்வெல்ல பிரதேச செயலகங்களில் மின்தூக்கிகள் பொருத்துவதற்காக ரூப 15 மில்லியன் ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவற்றில் செலவுகள் ஏதும் மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர் இடைநடுவில் வேலையை நிறுத்தி விடுதல் (முற்பணத் தொகை செலுத்தாமை ஆகிய காரணங்களினால்) இந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு முடியாமல் போனதென அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (எ) | அகுரஸ்ஸ பிரதேச செயலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 20 மில்லியனிற்கான ஏற்பாடுகள் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் செலவு விடயங்களின் கீழ் கிடைத்திருந்ததுடன், ரூபா 0.449 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. ரூபா 19.551 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது அந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 98 சதவீதத்தை கொண்டிருந்தது. | ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்வதற்காக காலம் கடந்திருந்தமையால் நிர்மாண வேலை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் மீது நிர்மாண வேலை நிறுத்தப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 29 அமைச்சுக்களில் இருந்து மற்றும் 21 திணைக்களங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதி அளவில் முறையே ரூபா 3,580,885,348 தொகையும், மற்றும் ரூபா 1,332,044,911 தொகையும் என கூட்டுத்தொகை ரூபா 4,912,930,259 இற்கான ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன், அவற்றில் முறையே ரூபா 2,991,952,851 தொகை மற்றும் ரூபா 1,210,090,233 தொகையும் பயன்படுத்தப்பட்டு இருந்தது. அதன் படி முறையே ரூபா 588,932,497 தொகை மற்றும் ரூபா 121,954,678 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதன் சதவீதம் முறையே நூற்றிற்கு 16 மற்றும் நூற்றிற்கு 9 ஆகக் காணப்பட்டது. | வரிசை அமைச்சினால் இந்தப் பணம் ஒதுக்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான கட்டுநிதிகள் திறைசேரியினால் போதியளவாக வழங்கப்படாமையால் இவ்வாறு நேரிட்டது என அறிவித்திருந்தது. | கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை முடிந்தளவு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 69,576,920 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள 290 வைப்புக்களுக்குரிய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் ரூபா 8,110,371 தொகைக்கான 22 வைப்புக்கள் 5 வருடங்களை மிகைத்தவை ஆகும். | போதியளவு கட்டுநிதிகள் காணப்படாமை, செயற்திட்டம் தொடர்பாக கணக்காய்வு ஐய வினாக்கள் காணப்படல், கோவைகளின் குறைபாடுகள் காணப்படுவதால் உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பித்திருக்காமை ஆகிய காரணங்களினால் இந்த வைப்புக்களை தீர்ப்பதற்கு முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2.5 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138 மற்றும் 139 இற்கு இணங்க செயற்படாமையால் 2021 திசெம்பர் 31 திகதி வரை வழங்கப்பட்டிருந்த ஆனால் 2022 மே 04 திகதி வரை கொடுப்பனவிற்காக | இந்தக் காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன் காசோலைகள் எழுதும் போது நிதிப் பிரமாணம் 237 தொடர்பாக கவனம் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 3,444,830 தொகை பெறுமதியான 56 காசோலைகள் காணப்பட்டது. | | செலுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஆரம்பிக்கப்பட்டிருக்காத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சௌபாக்கிய கிராமம் 2021 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிடபெத்தர பிரதேச செயலகத்தினால் கிதுல் சார்ந்த உற்பத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 2,185,044 இற்கான ஏற்பாடுகளின் கீழ் கலுபோவிடிய கிராமத்தை இணைத்து செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் மாதம் வரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. | உபகரணங்கள் தட்டுப்பாடு காரணத்தினால் இந்த கொள்வனவு தாமதம் அடைந்த போதிலும் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த தாமதங்களை தவிர்த்து ஏற்பாடுகளை உச்ச மட்ட வினைத் திறனுடன் பயன்படுத்தி விரைவாக நலன்பெறுவோருக்கு நலன் வழங்கக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான முச்சக்கர வண்டி ஒன்று திருத்த வேலைகள் மேற்கொள்ளாமல் அலுவலக வளவில் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட நிதியமைச்சுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களின் சிதைவடைந்த வாகனங்களை பயன்பாட்டில் இருந்து அகற்றுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.ங | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்று தென் மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள நட்டங்கள் சேதங்கள் என காட்டப்பட்டிருந்த ரூபா 181,867 இற்கான நட்டங்கள் சேதங்கள் மீதி ஒன்று குற்றவாளிகளிடம் அறவீடு செய்தல் மற்றும் ஏடுகளில் இருந்து பதிவழிப்புச் செய்வதற்கான அங்கீகாரம் பெறல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 31 திகதி வரை அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக இது வரை வழக்கு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அந்த அலுவல்களை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய மீதிகள் தொடர்பாக எதிர்காலத்தில் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்திருந்தது. | இது தொடர்பாக அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு விரைவாக செயற்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 47,550 இற்கான நட்டங்கள் சேதங்கள் மீதி ஒன்று மீளாய்வாண்டிற்கான நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்காததுடன் அந்த நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இறுதிக் கணக்குகளில் உட்படுத்துவதற்கு முடியாமல் போன இந்த நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டது. | அனைத்து நட்டங்கள் மற்றும் சேதங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டி இருந்ததுடன் விரைவாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்தில் இழப்புக்களும் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பேணப்பட்டு வரும் கோவையை பரிசோதனை செய்த போது நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்காத பிரதேச செயலகம் ஒன்றிற்குரிய 2019 மற்றும் 2021 ஆண்டுகளின் போது நேரிட்டிருந்த 2 நட்டங்கள் சேதங்கள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | கோவைகளில் காணப்படும் குறைபாடுகளை சரி செய்து நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இழப்புக்களும் சேதங்கள் தொடர்பாக விரைவாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு வழங்கியிருந்த 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு கணக்காய்வுத் திகதியாகிய 2022 ஆகஸ்ட் 31 திகதி வரை பதில் கிடைத்திருக்கவில்லை. | இந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்கான அவதானிப்புக்கள் தற்போது அழைக்கப்பட்ட போதிலும் அவை கிடைத்த பின்னர் பதில் அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலப் பகுதியுள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கம்பெரலிய கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 471,679 தொகை செலவிடப்பட்டு சமகி மாவத்த 4 ஆவது குறுக்குப் பாதை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் வீட்டு வாசிகளின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்காமையால் நீர் வடிந்து செல்லக் கூடிய செய்முறை ஒன்று காணப்படாமையின் காரணத்தினால் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மழை நீரினால் பாதை மூடப்படுவதுடன் இந்த நீரை அகற்றுவதற்காக நடவடிக்கை ஏதும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பாதையில் வதியும் ஒருவரினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இதன் மூலம் மழை காலத்தில் வீட்டு வாசிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அகற்றுவதற்கு எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். |
| (ஆ) | திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் திவிநெகும வர்த்தக சங்கங்களை வலுப்படுத்தல் மற்றும் அந்த சங்கங்களின் ஊடாக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி திட்டங்களை தொடர்புபடுத்தல் மற்றும் இலத்தரனியல்/ கணினி தொழிநுட்பத்தின் மூலம் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக தொடர்புபடுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2020 மார்ச் 02 திகதி முதல் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் தென் மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளகக் கணக்காய்வு அலுவல்களை | இந்த பந்திக்குரிய பதில் மாவட்ட செயலாளரின் விடயப் பரப்பிற்கு உரித்தானது ஒன்று அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த உத்தியோகத்தரின் கடமை அலுவல்கள் முறைப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக செயற்பட வேண்டும். |

மேற்பார்வை செய்யும் கருமத்திற்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் அவரின் சேவை நிலையம், அவரின் விருப்பப்படி மாத்தறை மாவட்ட சமூர்த்தி அலுவலகம் ஆக இருந்தது. இந்த உத்தியோகத்தருக்கு முறையான நியமனக் கடிதம் ஒன்று மற்றும் குறித்தொதுக்கிய கடமை சாட்டுதல்கள் காணப்படாததுடன் தென் மாகாணத்திற்காக கடமைகள் மேற்கொள்வதற்கு நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் அவரின் கடமை மாத்தறை மாவட்டத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தமையால் இந்த சேவைக்கான நியமனம் செய்யப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) திக்வெல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் சௌபாக்கிய உற்பத்தி கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

-----------------------------------------------------------

| | | |
|---|---|---|
| i. கோட்டேகொட மாசி மற்றும் கருவாடு உற்பத்தி கைத்தொழில் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 தொகையில் 02 கட்டங்களின் கீழ் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 2021 திசெம்பர் 16 திகதிய 2 கிராம அபிவிருத்தி சங்கங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 23 திகதி கணக்காய்வு பௌதீக பரிசோதனை வரை கட்டிடத்தின் அத்திவாரம் வரை 24 கொங்கிரீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தூண்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த கம்பிகள் துருப்பிடித்து இருந்ததென அவதானிக்கப்பட்டது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையும் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்வதற்காக காலநீடிப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாட்டில் காணப்படும் நெருக்கடி நிலைமையில் சந்தையில் நிர்மாண வேலைகளுக்கான பண்டங்களுக்கான தட்டுப்பாடு ஒன்று காணப்பட்டமை, வழங்கப்பட்ட காலம் போதியளவாக இன்மை ஆகிய காரணங்களினால் 2022 ஆண்டின் தொடர்வேலை செயற்திட்டம் என இது வரை அங்கீகாரம் கிடைக்கப் பெறாமையால் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பொது மக்களுக்கு பயன்படுத்தக் கூடியவாறு நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ii. மெல்புர மயனத்திற்கு செல்லக் கூடிய பாதையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 309,532 இற்கான மதிப்பீட்டு தொகைக்கு நிறைவேற்றுவதற்காக சமூக அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. பாதை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பௌதீக பரிசோதனையின் போது 38 மீற்றர்கள் நீளமான பாதையின் மதிப்பீட்டு வேலை விடய இலக்கம் 4 இற்கு இணங்க அனைத்து 3 மீற்றர்களுக்கும் விரிவாக்கல் பிணைப்பு (expansion joints) போடப்பட வேண்டியிருந்த போதிலும் இந்தப் பாதைக்காக 3 விரிவாக்கல் பிணைப்பு மாத்திரம் போடப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் படி கொங்கிரீட் துண்டு பரிசோதனை மேற்கொண்டிருக்காததுடன் மதிப்பீட்டிற்கு இணங்க பாதையின் உயரம் மிலி மீற்றர் 150 ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் பாதையின் மத்தியில் குவிவு ஏற்படக் கூடியவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 4 விரிவாக்கல் பிணைப்புகளுக்கு மாத்திரம் பில்பத்திரத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது எனவும் மழையின் காரணமாக பாதையின் மேற்பகுதியை பாதுகாப்பதற்காக பரப்பப்பட்டிருந்த பொலிதீன் காரணமாக பாதையின் மேற்பகுதியில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டிற்கு இணங்க இந்த அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவ்வாறு இன்றேல் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| iii. கொடல்லவத்த இல் இருந்து பெத்தரே பாதைக்கு செல்லும் வடிகால் முறைமையை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 487,790 இற்கான பெறுமதியின் கீழ் சமூக அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் 2021 திசெம்பர் 15 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 25 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டம் 2022 பெப்ரவரி 24 திகதி கணக்காய்வு பௌதீக பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட வடிகாலை நிர்மாணிப்பதற்காக பாதையில் மத்தியில் வெட்டி கம்பிகள் மாத்திரம் போடப்பட்டிருந்ததுடன் அந்த கம்பிகள் துருப்பிடித்து இருந்ததுடன் பாதையில் பயணம் செய்பவர்களுக்கு இவ்வாறு பாதையின் மத்தியில் வடிகால் வெட்டியிருத்தல் பிரயாணத்திற்கு இடையூறாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் காரணமாக நிர்மாண வேலைக்குரிய பண்டங்கள் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டிருந்த வசதியீனங்கள் காரணமாக செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பொது மக்களுக்கு பயன்படுத்தக் கூடியவாறு நிலைமையை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | iv. களிமண் கைத்தொழிலிற்காக புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 757,160 தொகைக்கு நிறைவேற்றுவதற்கு சமூக அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 28 திகதியில் உள்ளவாறு செயற்திட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்டது என ஒப்பந்தக்காரர் எழுத்துமூலம் அறிவித்திருந்த போதிலும் 2022 பெப்ரவரி 24 திகதி கணக்காய்வு பௌதீக பரிசோதனை அளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்காத கருமங்கள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. இங்கு மதிப்பீட்டு விடய இலக்கம் G 1 இற்கு இணங்க வேயும் கூரை தகடுகள் மட்டும் இறக்குமதி செய்யும் பலகைகளை முழுமையாக பயன்படுத்தி கூரையை பூர்த்தி செய்வதற்காக ரூபா 195,448 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீண்டும் வேலை விடயம் G 2 என Wall Plat இற்காக ரூபா 106,212 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த G 2 விடய இலக்கத்திற்கு இணங்க 5x3 Wall Plate 4 நிர்மாணிக்கப்பட வேண்டியநிருந்த போதிலும் 2 மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டு விடய இலக்கம் G 1 இங்கு இணங்க இறக்குமதி செய்த பலகைக்காக கருப்பு அல்லது கபில பலகை பாதுகாப்பு திரவம் இரண்டு முறை பூசப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த தாமதத்தை சரி செய்து மீண்டும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது எனவும் பில் பத்திரங்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது மிகையாக மேற்கொள்ளப்பட்டிருந்த அளவுகளை கழித்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படாத வேலைகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதற்கும் மதிப்பீட்டிற்கு இணங்க நிறைவேற்றப்படாத வேலைகள் தொடர்பாக ஒப்பந்த வேலைகளுக்கான பணம் செலுத்தும் போது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் செயற்பட வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தினால் மானியமாக வழங்கப்படும் கொடை பத்திரக் காணி ஒன்றில் காணப்படும் கனிய வளங்கள் தொடர்பாக காணப்படும் சாட்டுதல் பத்திரத்தின் பாதுகாப்பு பிரிவின் படி ''காணி ஒன்றில் மற்றும் அதன் மேற்பகுதியில் காணப்படும் அனைத்து கனிய பண்டங்கள் தொடர்பாக உரிமை மற்றும் அவ்வாறான ஏதேனும் கனியப் பொருட்கள் தோண்டுதல், தேடுதல், அது தொடர்பாக செயற்படுதல் மற்றும் வெளியே எடுத்துச் செல்லும் உரிமை அரசிற்கு ஒதுக்கப்பட்டு வைக்கப்படும்'' | இது தொடர்பாக காணி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து ஆலோசனை கேட்டிருந்த போதிலும் இது வரை அதற்கான பதில் கிடைத்திருக்காததுடன் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அந்த பிரிவிற்கு இணங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அக்குரஸ்ஸ பிரதேச செயலக பிரிவில் அரச கொடைப் பத்திரத்தை உடைய 5 காணித் துண்டுகளில் கருங்கற்கள் தோண்டுவதற்காக தனியார் விண்ணப்பதாரிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரசுக்கு சொந்தமான உரிமையை வேறு நபர்களுக்கு வழங்கப்படும் எனின் காணி தொடர்பாக அரசிற்கு ஏதேனும் கட்டணம் அறவீடு செய்வதற்கு பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(உ) புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் மூலம் வெளியிடப்பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க அகழ்தல் முகப் பகுதியில் உள்ள நிலையற்ற கற்துண்டுகள் மற்றும் முன்னர் மேற்கொண்டிருந்த வெடிப்புக்களின் போது ஏற்பட்டிருந்த கற்களை மீண்டும் வெடிப்பித்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் அகற்ற வேண்டும் எனவும், அகழ்தல் படிமுறையில் ஒரு அடுக்கின் உயரம் 10 மீற்றர் என நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அகழ்வு மேற்கொள்ளும் போது காணியின் அனைத்து எல்லைகளையும் சுற்றி 5 மீற்றர் காணிக் கீற்றொன்று அகழ்தல் மேற்கொள்ளாமல் கைவிடப்பட வேண்டும் எனவும் அகழ்வு மேற்கொள்ளும் பூமியில் எல்லை கொங்கிரீட் தூண்கள் மூலம் அடையாளப்படுத்தி அகழ்வினை பூர்த்தி செய்யும் வரை பேணிச் செல்ல வேண்டும் எனவும், கருங்கல் போக்குவரத்தின் போது அந்த கற்களை சிறந்த முறையில் மூடப்பட வேண்டும் எனவும், நுளம்புகள் பரவக்கூடிய நீர்த் தேக்கங்கள் ஏற்படாதவாறு அகழ்வு பூமியை பேணிச் செல்ல வேண்டும் எனவும், ஊழியர்களுக்காக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் சேவையில் ஈடுபடும் போது அவற்றை கடைபிடிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாத்தறை, ஹக்மனை மற்றும் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பௌதீகப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட கற்சுரங்க உரிமையாளர்களினால் அந்த நிபந்தனைகள் உரிய முறையில்

குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து அவதானிப்புக்கள் கிடைத்த பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக பரிந்துரைகள் வழங்கும் போது இது தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட்டு செயற்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் தொடர்ச்சியாக அகழ்வு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | அகுரெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் 368B தொல மாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவின் எரனவிலஹேன எனும் அரசாங்கக் காணியில் நடாத்தப்பட்டு வரும் கற்சுரங்கம் அனுமதிப்பத்திரம் அல்லது அங்கீகாரப்பத்திரம் ஏதும் இன்றி மூன்று மாதங்களுக்கு அண்மித்த காலம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுப் பரிசோதனைக்கு ஆளாகிய 2022 ஜூன் மாதம் வரையும் அந்த கருங்கல் அகழ்வு அலுவல்களுக்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மூலம் தொழில்துறை அகழ்வு அனுமதிப்பத்திரமும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமும் மாவட்ட வெடிபொருட்கள் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் வெடி மருந்து அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்திலும் அந்த இடத்தில் கருங்கல் அகழ்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் கல் அறைக்கும் இயந்திரம் ஒன்றும் , 02 எக்ஸவேட்டர்களும் மற்றும் கொம்பிரஷர் இயந்திரம் ஒன்றும் காணப்பட்டதுடன் கருங்கல் ஆலை செயற்பாட்டு நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க இயலும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படுவதுடன் இது தொடர்பாக உரிய தரப்பினரை அறிவுருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு செயற்பட வேண்டும். |
| (எ) | அகுரெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் அஸ்மகொட ஹிருவலஹேன காணியின் ஆரம்ப உரிமையாளரினால் கருங்கல் வேலைத்தளமொன்று ஆரம்பிப்பதற்காக 2005 ஆண்டு விண்ணப்பித்திருந்ததுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, உதவி வெடிப்பொருட்கள் கட்டுப்பாட்டாளர் மற்றும் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களினால் அந்த கற்சுரங்கம் பேணிச் செல்வதற்கு பொறுத்தமில்லை என்ற விடயங்களை எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. 2017 ஆண்டின் போது மீண்டும் கற்சுரங்கம் ஒன்று ஆரம்பிப்பதற்கு | இது தொடர்பாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப்பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அவதானிப்புக்கள் அழைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்களினால் விதிக்கப்பட்டிந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதுடன், இந்த கற்சுரங்கம் நடாத்திச் செல்வது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு |

| | | |
|---|---|---|
| அனுமதி கோரியிருந்ததுடன், முன்னர் காணப்பட்ட சேதம் விளைவிற்கும் நிலைமையை கவனத்தில் எடுக்காமல் 2018 ஆண்டு முதல் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் கற்கள் உடைப்பதற்காக அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அகழ்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2005 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2021 திசெம்பர் 06 திகதி வரை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், ஹேனேகம கிராமவாசிகளினால் ஜனாபதியவர்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டின் படி 2020 திசெம்பர் 16 திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தால் மாத்திரம் கற்சுரங்கத்திற்காக தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அந்த பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என 2022 ஜனவரி 12 ஆகிய கணக்காய்வுத் திகதி வரை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | செயற்பட வேண்டும். |

**(ஏ) சுபிரிகமக் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2020**

---

| | | |
|---|---|---|
| (i) தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த நாஒடுன்ன தெற்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமகி மாவத்த துணைப்பாதையை அபிவிருத்தி செய்வதற்காக தெவிநுவர பிரதேச செயலகத்தினால் தெவிநுவர பிரதேச சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்தக்காரரினால் 2021 ஒக்தோபர் 21 திகதி வரை செயற்திட்டத்தின் வேலையை பூர்த்தி செய்து ஒப்படைத்திருக்கவில்லை. தெவிநுவர பிரதேச சபையினால் 2021 திசெம்பர் 16 திகதி செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்தல் தொடர்பாக ரூபா 1,428,300 தொகை பெறுமதியான கொடுப்பனவு பில் பத்திரம் ஒன்று பிரதேச செயலகத்திற்கு | இது தொடர்பாக தேவையான நில அளவை வரைபுகள் தயாரிப்பதற்கு பாரிய தொகையொன்று செலவீடு செய்வதற்கு நேரிடுவதால் இதுவரை அந்தக் கருமத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருந்ததெனவும், பிரதேச சபையினால் அறிவித்துள்ளதென தெரிவிக்கப்பட்டிருந்தது. | பாதை அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளும் போது பிரதேச சபை அதிகார சட்டத்திற்கு இணங்க பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளின் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றதென உறுதிப்படுத்திய பின்னர் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 24(1) பிரிவிற்கு இணங்க பிரதேச சபையினால் எல்லைகளை அடையாளமிட்டு பாதைகள் மற்றும் ஒழுங்கைகள் தொடர்பாக வரைபுகள் தயாரித்தல் மற்றும் பெயர் பட்டியல் ஒன்று வர்த்தமானி மூலம் வெளியிடப்பட வேண்டியிருந்ததுடன், 24(3) மற்றும் 24(4) பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்த பின்னர் பிரதேச சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகள் மற்றும் ஒழுங்கைகளின் பாதை பதிவேடொன்றில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காமல் தனியார் காணியொன்றில் அரசாங்க நிதியத்தை பயன்படுத்தி பாதை அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்வதற்காக பிரதேச செயலகத்தினால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ii) | அதன்படி பிரதேச சபையினால் தனியார் காணியில் காணப்படும் பாதைக்கு சமாந்திரமல்லாமல் மேற்கொள்ளப்படும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளுக்காக வேலை விடய இலக்கம் 1 முதல் 12 வரை கூட்டுத்தொகை ரூபா 1,152,676 தொகைக்கான பில்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததெனவும், அதன் மூலம் அரசாங்க நிதியம் முறைசாரா விதமாக மற்றும் சட்டரீதியற்ற செலவுகள் மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (iii) | மதிப்பீட்டின் வேலை விடயம் 13 இன் கீழ் கொங்கிரீட் துண்டுக் கற்கள் பதித்தலுக்காக ரூபா 271,425 தொகைக்கான செலவு பில்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பாதையில் விரித்திருந்த துண்டுக் கற்கள் உரிய நியமத்தில் காணப்படவில்லை என ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது. அதன்படி, ஒப்பந்தக்காரரினால் உரிய நியமத்துடன் மேற்கொள்ளப்படாத வேலைக்காக செலுத்துவதற்கு தேவையான பில்பத்திரங்கள் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு, பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | இந்த கொடுப்பனவு மேற்கொள்ளல் தொடர்பாக மாவட்ட பொறியியலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கொடுப்பனவு மேற்கொள்ளும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**(ஐ) 2021 ஆண்டின் போது கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் செயற்படுத்தப்படும் கிராமிய விளையாட்டு திடல்கள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

-----------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | முலடியன பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட ரதாவெல ஹொரமுல்ல விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக விவசாய அமைப்பொன்றுடன் ரூபா 1,914,323 தொகைக்கான திகதி குறிப்பிடப்படாத உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் செயற்திட்டம் இலங்கை காணி அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாத்தறை அழைத்த LD/472 இலக்கம் கொண்ட மற்றும் 2020 ஒக்தோபர் 19 திகதிய கடிதம் மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 7/11/19/MA/251 இலக்கம் கொண்ட மற்றும் 2021 நவம்பர் 24 திகதிய கடிதத்திற்கு இணங்க குறிப்பிட்ட காணியை அபிவிருத்தி செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு பொருத்தமின்றி விளையாட்டுத் திடல் நிர்மாணிப்பதற்காக காணி அபிவிருத்தி செய்யப்பட்டு வந்தது. | விளையாட்டுத் திடலை தயாரிப்பதற்காக போதியளவு ஏற்பாடுகள் வழங்கப்பட்டதெனவும் பின்னர் பாதுகாப்பு மதில் நிர்மாணிப்பதற்காக ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் 2022 பாதீட்டு முன்மொழிவுகளின் கீழ் இதனை தொடர்புபடுத்தப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் SMRSSII/DD/07/RSO-2-1 இலக்கம் கொண்ட மற்றும் 2021 மார்ச் 05 திகதிய கடிதத்தின் இணைப்பு 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் படி தரையை தயாரித்தல், மண், சரலை, புற்பானம் போக்குவரத்துக்காக உள்ளூராட்சி நிறுவனத்தின் இயந்திர உபகரணங்கள் மற்றும் தொழில் பங்களிப்பு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்காக செலவிடப்படும் எரிபொருளுக்கான செலவு மாத்திரம் மதிப்பீட்டில் உட்படுத்தப்பட வேண்டும் என கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் அதற்கு பொருத்தமின்றி செயற்திட்டத்தில் அந்த வேலைகள் விவசாய அமைப்புக்கு சாட்டுதல் செய்து அவர்கள் மூலம் வேலைகளை பூர்த்தி | உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படும் வளங்களின் பற்றாக்குறை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்துகொள்வதற்காக ரூபா 1,941,323 தொகை செலுத்துவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | வழிகாட்டலின் பிரிவு இலக்கம் 05 இற்கு இணங்க விளையாட்டுத் திடலில் அத்தியவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படும் விளையாட்டுக்களுக்கு பொதுவாக பயன்படுத்தப்படக்கூடியவாறு விலையாட்டுத்திடலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என கட்டளை இடப்பட்டிருந்த போதிலும், அதற்கு பொருத்தமின்றி விளையாட்டுத் திடலின் நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு தேவையான வேலை விடயங்களை உட்படுத்தி மதிப்பீடு தயாரித்திருக்கவில்லை என தரைக்கு மண் போட்டு நிரப்புதல் மாத்திரம் செயற்திட்டத்தின் அடிப்படை குறிக்கோளாக இருந்ததென கணக்காய்வு வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இடத்தின் தேவைப்பாட்டின் படி பொதுவாக பயன்படுத்தக்கூடியவாறு விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது எனவும், தற்போது இந்த விளையாட்டுத் திடல் பிரதேசவாசிகளினால் பயன்படுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |
| (iv) | அதன்படி, குறிப்பிட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை எனவும், பிரதேச செயலகத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் நிதிப் பிரமாணம் 128(1)(ஓ) இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட வழிகாட்டல்களின் படி இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | பரபாமுல்ல கிழக்கு துகஹமலித்த விளையாட்டுத் திடல் கரப்பந்து விளையாட்டுத் திடலொன்றாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக முலடியன பிரதேச செயலாளர் மற்றும் முலடியன பிரதேச சபை இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 1,321,516 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த விளையாட்டுத் திடலில் இரண்டு பக்கங்கள் அடங்கக்கூடியவாறு நிர்மாணிக்கப்பட்டிருந்த வலை மரைப்பு மேற்தரையிலிருந்து நிலத்தினுள் 1.65 மீற்றர் வரை உள்வாங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட வடிகாலின் காரணமாக மற்றும் மதிப்பீட்டிற்கு இணங்க கரைப்பந்தாட்ட தூண்கள் நிறுவப்பட்டிருக்காமையால் | தற்போது மண்ணை அகற்றி விளையாட்டுத் திடலை சமப்படுத்தி விளையாடக்கூடிய நிலைமைக்கு மாற்றியிருந்ததுடன், பிரதேசவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இங்கு விளைவாடுகின்றார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. மண் கழுவிச் செல்வதை தவிர்ப்பதற்காக காணி பயன்பாட்டு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் 2022 ஆண்டில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் செயற்படுத்துவதற்கு | இவ்வாறு ஏற்பாடுகள் விலைவற்று செலவிடப்படல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக செயற்பட வேண்டியதுடன் விளையாட்டுத் திடலை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு விரைவாக ஆக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டுத் திடலை பயன்படுத்த முடியாதிருந்தது. இதன் காரணமாக கரப்பந்தாட்டம் மேற்கொள்ளக்கூடிய முறையில் விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக மேலும் ரூபா 900,000 தொகை செலவிட நேரிடும் என குறிப்பிட்டு முலடியன பிரதேச சபையினால் ரூபா 1,250,000 தொகை சபை நிதியத்திலிருந்து மேற்கொள்வதற்கு 2021 ஒக்தோபர் 21 திகதி சபைத் தீர்மானம் எடுத்திருந்தமையால் செயற்திட்டத்திற்காக பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,321,516 தொகை விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் விளையாட்டுத் திடலை தயாரிக்கும் போது வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்ட மண் 6763 கண மீட்டர்கள் முறைசாரா விதமாக விளையாட்டுத் திடலின் சுமார் 40 மீற்றர் தூரம் முதல் குவிக்கப்பட்டிருந்ததுடன், மழையின் காரணமாக அந்த மண் அரிப்புக்குற்பட்டு கழுவிச் செல்லப்பட்டிருந்தமையால் பக்கத்திலுள்ள அரச மற்றும் தனியார் காணிகளுக்கு சேதம் உண்டாக்கக் கூடிய நிலைமை ஒன்று காணப்பட்டது. | திட்டமிடப்பட்டுள்ள வேலைத் திட்டமொன்றுக்காக விளையாட்டுத் திடலின் சரிவுடனான பகுதிகளை தெரிவு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| **(ஓ)** | **பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ரூபா 52,123,045 இற்கான ஏற்பாடுகளின் கீழ் விதாதா வள நிலையங்களினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்** | | |
| (i) | செயற்திட்டத்தின் குறிக்கோள் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது எனினும், விதாதா வள நிலையங்களினால் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னேற்றத்தின் படி மாத்தறை மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலகங்களிலுள்ள 430 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 90 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தொழில் முயற்சியாளர் ஒருவரேனும் உருவாகியிருக்கவில்லை. | இவ்வாறு நலன்பெறுவோர் ஒருவரும் முன்வராமைக்காக பல்வேறு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு முடிந்தளவு முயற்சி எடுக்க வேண்டும். |
| (ii) | 16 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட நலன் பெறுவோர் எண்ணிக்கை 625 ஆக காணப்பட்டதுடன் 418 நலன் பெறுவோருக்காக இயந்திர | தற்போது சந்தையில் காணப்படும் அவ்வாறான இயந்திர உபகரணங்களின் தட்டுப்பாடு இதற்குக் | இந்த உபகரணங்களை விரைவாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 255 உபகரணங்கள் 2021 திசெம்பர் 31 திகதி வரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | காரணமாக இருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (iii) | 2021 பெப்ரவரி 25 திகதிய பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் இலக்கம் 03/2021 கொண்ட சுற்றறிக்கை மற்றும் SMRIP/DEV/VY/10/03/2021(பொது) கடிதத்தின் படி புதிய கிராமியக் கைத்தொழில் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவது குறிக்கோளாக இருந்த போதிலும், அதற்கு பொருத்தமில்லாமல் மாத்தறை விதாதா வள நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்ட 22 பேரில் 19 பேரும் தற்போது அந்த தொழில் முயற்சிகள் நடாத்தும் நலன்பெறுவோர் ஆகும். மேலும், மேற்கூறிய கடிதத்தின் படி ஆடைத் தொழில், உணவு உற்பத்தி, காளான் பயிர்செய்கை ஆகிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள நலன்பெறுவோரை தெரிவு செய்யக்கூடாது என குறிப்பிட்டிருந்த போதும் அதற்கு பொருத்தமின்றி 03 பிரதேச செயலகங்களின் 14 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அவ்வாறான கைத்தொழிலுக்காக 14 நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் அவ்வாறு குறிப்பிட்டிருந்த போதிலும் நலன்பெறுவோரின் கோரிக்கைகளை அமைச்சுக்கு சமர்ப்பித்த பின்னர் அங்கீகாரத்தை பெற்று செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | அரச வழிகாட்டல் கோவையின் 2.5.1(அ) இன் படி பெறுகைக் குழு அங்கத்தவர்களினால் கவனம் செலுத்தப்படும் பெறுகை செய்முறைக்காக நிதியம் கிடைக்கப்பெறும் என கூட்டாகவும், வெவ்வேறாகவும் பொறுப்பாக இருக்க வேண்டியிருந்த போதிலும் ஏற்பாடுகள் இன்மையின் காரணமாக மாத்தறை மற்றும் அகுரஸ்ஸ பிரதேச செயலகங்கள் இரண்டில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 4,643,834 தொகைக்கான செலுத்தப்பட்டிருக்காத 40 பில் பத்திரங்கள் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டது. அவற்றில் 21 பில் பத்திரங்கள் தொடர்பாக ரூபா 1,969,169 தொகை பெறுமதியான பண்டங்கள் பிரதேச செயலகங்களுக்கு | பதில் வழங்கியிருக்கவில்லை. | இந்த நலன் பெறுவோருக்கு பண்டங்களை விரைவாக பெற்றுக்கொடுப்பதற்கும், வழங்குனர்களுக்கு விரைவாக பணம் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கிடைக்கப்பெற்று தெரிவு செய்யப்பட்ட நலன் பெறுவோருக்கு விநியோகித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீதியான 19 பில் பத்திரங்களுக்கான கட்டளையிடப்பட்ட பண்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2022 மார்ச் 23 வரையும் பிரதேச செயலகங்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

**4. நிலைபேறான அபிவிருத்தி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டம் 2030 இற்கு இணங்க நெருங்க வேண்டிய குறிக்கோள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்கும் தயார் நிலை தொடர்பாக பரிசோதனை செய்த போது மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2030 தொடர்பாக 2021 ஆண்டின் போதும் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது பெற்றிருந்த ஏற்பாடுகளின் அடிப்படையில் 6 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் இனங்கண்டிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டம் 2030 இன் படி 11 குறிக்கோள்கள் தொடர்பாக கவனம் ஏதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 17 குறிக்கோள்களை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் வரிசை அமைச்சின் மூலம் வழங்கப்படும் ஏற்பாடுகள் மீது செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதனால் இந்த குறிக்கோள்கள் சில சில வரையறைகளுக்கு இலக்காகுகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு செயற்பட வேண்டும். |
| (ஆ) | இனங் காணப்பட்ட 06 குறிக்கோள்கள் தொடர்பாக காணப்பட்ட இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகள் போலவே முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சுட்டிகள் இனங் கண்டிருக்கவில்லை. | - மேற்படி - | குறிப்பிட்ட வழிகாட்டல்களுக்கு இணங்க இலக்குகளை இனங் காண்பதற்கும் அதன்படி செயற்பட்டு முன்னேற்றத்தை அளவை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் MSDW/08/65 கொண்ட நிலைபேறா அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் தேசிய மட்டத்தில் திட்ட முறைமையுடன் | - மேற்படி - | சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக இந்த அலுவல்களை பூர்த்தி செய்ய வேண்டும். |

முகாமைத்துவ திட்டமொன்றின் படி தாபன ரீதியாக, மாகாண மற்றும் தேசிய மட்டத்தை நெருங்குவதற்காக கூட்டிணைப்பதற்காக இரண்டு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பெயர்கள் குறிப்பிட்டு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சுக்கு அனுப்பியிருக்கவில்லை.

**5. நல்லாளுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்தவாறு பிரஜைகள்/ சேவை நாடுனர் சாசனத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் மாத்தறை மாவட்டச் செயலகம் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | தற்போது 2022 ஆண்டிற்கான பிரஜைகள்/ சேவை நாடுனர் சாசனம் தயாரிக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை 1733 தொகையும், உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை 1827 தொகையாக காணப்பட்டமையால் பதவியணியில் காணப்படும் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 104 பேரைக் கொண்ட மிகைப் பதவியணியினை முறைப்படி அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உள்நாட்டு விவகார இராஜாங்க அமைச்சு மற்றும் இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | விரைவாக இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக செயலாளரின் இலக்கம் 02/2018 கொண்ட மற்றும் 2018 ஜனவரி 24 திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி மனிதவள திட்டமொன்று | காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இந்த திட்டம் தயாரிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு முடியாமல் | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒட்டுமொத்த பதவியணிக்குமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | போனதென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2017 செப்தம்பர் 20 திகதிய 04/2017 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனத்தில் உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, விளகல், சேவையை விட்டுச் செல்லல், சேவையை விட்டு நீக்கல், ஓய்வு பெறல் மற்றும் இறத்தல் ஆகிய காரணங்களினால் நடைபெறும் பதவியணி மாற்றங்களை நாளதுவரையாக்கி ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து ஒரு மாதத்துக்குள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் இந்த மாற்றங்களை அறிவிக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |